வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P.1632

# ஈழநாடு

Eelanadu

விலை ரூ. 30/=




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 03.02.2026 செவ்வாய்க்கிழமை | இதழ் : 34 | பக்கங்கள் : 08

# கிவுல் ஓயா திட்டத்துக்கு எதிராக நேற்று உணர்வெழுச்சியுடன் திரண்டனர் மக்கள்

வவுனியா, பெப்ரவரி 04

**வவுனியா வடக்கில் முன்னெடுக்கப்படவுள்ள கிவுல் ஓயா திட்டத்துக்கு எதிராக நெடுங்கேணியில் நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதில், உணர்வெழுச்சியுடன் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர். இந்த ஆர்ப்பாட்டம் நெடுங்கேணி பஸ் நிலையம் முன்பாக நேற்றுக் காலை ஆரம்பமாகியது.**

இதன்போது கிவுல் ஓயா திட்டத்துக்கு எதிராக மக்கள் கோஷங்களை எழுப்பியதுடன் பதாதைகளையும் தாங்கியிருந்தனர்.

தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து நெடுங்கேணி பிரதேச செயலகம் வரை ஊர்வலமாகக் கோஷங்களை எழுப்பியவாறு சென்றிருந்தனர்.

அங்கும் மக்கள் ஒன்றுகூடி தமது எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தியதுடன், வவுனியா வடக்கு பிரதேச செயலாளரிடம் மகஜரொன்றையும் ஜனாதிபதிக்கு அனுப்புவதற்காக வழங்கியிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் வடக்கு, கிழக்கின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து பெருமளவான தமிழ் மக்கள் கலந்துகொண்டு அரசின் திட்டமிட்ட நில அபகரிப்புக்கு எதிராகக் குரல் கொடுத்திருந்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தவிர்ந்த தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் பொது அமைப்புகள் இணைந்து ஏற்பாடு செய்த

07

## அரசியல்வாதிகளும் பங்கேற்பு




## சபாநாயகருக்கு எதிராக முறைப்பாடு

கொழும்பு, பெப். 03

பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள பாராளுமன்ற முன்னாள் பிரதி பொதுச்செயலாளர் சமிந்த குலரத்ன, சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவுக்கு எதிராக நேற்று இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளார்.

சபாநாயகருடன் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாகவே தான் பணி இடைநீக்கம் செய்யப்பட்டதாகவும் சபாநாயகரின் ஊழல் நடவடிக்கைகள் குறித்தும் இந்த முறைப்பாட்டை மேற்கொண்டுள்ளதாக சமிந்த குலரத்னவின் சட்டத்தரணி தெரிவித்தார்.

இது குறித்துக் கருத்து தெரிவித்த

07

## கிவுல் ஓயாவுக்கு எதிரான போராட்டம் தமிழருக்கு முக்கியமான திருப்புமுனை

### சுமந்திரன் கருத்து

வவுனியா, பெப். 03

கிவுல் ஓயா திட்டத்துக்கு எதிரான போராட்டம் தமிழ் மக்களின் சரித்திரத்தில் மிக முக்கியமான திருப்புமுனையான போராட்டமாக அமைந்துள்ளது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு

07

## இராணுவ வாகனம் மோதி மயிலிட்டியில் ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், பெப். 03

மயிலிட்டி பகுதியில் நேற்று இராணுவ வாகனம் மோதியதில் ஒருவர் உயிரிழந்தார்.

சைக்கிளில் பயணித்த குறித்த நபர் வீதியை கடக்க முயன்றபோது அவர்மீது இராணுவ வாகனம் மோதியதிலேயே இந்த விபத்து சம்பவித்தது.

வாகனத்தை செலுத்திய பெண் சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளார். பலாலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## கொலைக் குற்றவாளி ஒருவருக்கு கிளிநொச்சியில் மரணதண்டனை

கிளிநொச்சி, பெப். 03

கொலைக் குற்றவாளி ஒருவருக்கு, கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தினால் நேற்று மரண தண்டனை வழங்கப்பட்டது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குரவில் கிராமத்தில், 2014 ஆம் ஆண்டு இடம்பெற்ற கொலையின் பிரதான சூத்திரதாரிக்கே மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

பூப்புனித நீராட்டுவிழா நிகழ்வில், இருவருக்கிடையில் ஏற்பட்ட வாய்த் தர்க்கத்தை

07

## யாழ். பாதுகாப்பு தலைமையகத்தை அகற்றும் திட்டம் அரசிடம் கிடையாது

கொழும்பு, பெப். 03

யாழ்ப்பாணத்திலிருந்து பாதுகாப்பு படைத் தலைமையகத்தை அகற்றும் எந்தத் திட்டமும் இல்லை என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

சமூகத்திற்குள் இது போன்ற தவறான மற்றும் ஆதாரமற்ற தகவல்களை பரப்புபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாதுகாப்புச் செயலாளர் சம்பத் துய்யாகொந்தா குறிப்பிட்டார்.

இதுபோன்ற புனையப்பட்ட மற்றும் உணர்திறன்மிக்க கூற்றுக்களை பரப்பும் நபர்கள் பொது மக்களிடையே தேவை யற்ற அச்சத்தை

07

## வைத்தியர்களின் போராட்டம் தீவிரம்; விசேட வைத்திய நிபுணர்கள் விலகல்

### நோயாளர்கள் பெரும் பாதிப்பு

கொழும்பு, பெப். 03

அரச வைத்தியசாலைகள் மற்றும் சுகாதாரத் துறையில் வைத்தியர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சனைகளுக்குத் தீர்வு வழங்குமாறு கோரி, நேற்று காலை 8.00 மணி முதல் ஒரு சில கடமைகளிலிருந்து விலகியிருக்கும் தொழிற்சங்க நடவடிக்கையை அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் முன்னெடுத்துள்ளது.

இருப்பினும், இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையில் விசேட வைத்திய நிபுணர்கள் சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வைத்திய நிபுணர்கள் எவ்விதத்திலும் கலந்து

07

## 49 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு

கொழும்பு, பெப். 03

78ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு 49 கைதிகளுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசமைப்பின் 34ஆவது உறுப்புரையின் ஊடாக ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்து வரும் கைதிகளுக்கு, அவர்கள் பூர்த்தி செய்த ஒவ்வொரு வருடத்திற்கும் ஒரு வாரம் என்ற அடிப்படையில் மன்னிப்பு

07

## திருமலை புத்தர் சிலை விவகாரம் கஸ்ஸப தேரர் மீண்டும் மறியலில்

திருகோணமலை பெப். 03

திருகோணமலை பகுதியில் புத்தர் சிலை வைக்கப்பட்டமை தொடர்பாக ஏற்பட்ட அமைதியற்ற சூழல் குறித்த வழக்கில் பலங்கொட கஸ்ஸப தேரர் உள்ளிட்ட 9 பேரை எதிர்வரும் பெப்ரவரி 9ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க திருகோணமலை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 16ஆம் திகதி, திருகோணமலையிலுள்ள விகாரையொன்றில்

07

## திடீர் வயிற்றோட்டத்தினால் யாழில் சிறுவன் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், பெப். 03

யாழ்ப்பாணத்தில் கிருமித் தொற்றினால் சிறுவன் ஒருவன் நேற்று முன் தினம் இரவு உயிரிழந்தார்.

கோண்டாவில் - இருபாலை வீதியைச் சேர்ந்த மகிந்தன் லர்மிகன் (வயது 11) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தார்.

இவருக்கு நேற்று முன்தினம் வயிற்றோட்டம் ஏற்பட்டது. நேற்று முன் தினம் மாலை 5.00

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுமியின் கை துண்டிக்கப்பட்ட சம்பவம் பொலிஸ் விசாரணைகள் திருப்தியில்லை

## யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிவான் விசனம்

யாழ்ப்பாணம், பெப். 03

யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறுமிக்கு மருத்துவத் தவறால் கை மணிக்கட்டுடன் அகற்றப்பட்டமை தொடர்பில் பொலிஸாரின் விசாரணைகள் தொடர்பில் நீதிமன்றம் கடுமையான அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

பொலிஸாரின் இத்தகைய செயற்பாடு தொடருமாயின் வழக்கை குற்ற புலனாய்வுத் துறையினருக்கு பரப்படுத்த நேரும் எனவும் பொலிஸாருக்கு மன்று அறிவுத்தியுள்ளது.

கடந்த 2023ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் சிறுமி ஒருவர் காய்ச்சல் மற்றும் தோலில் ஏற்பட்ட தொற்றுக் காரணமாக யாழ்.போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

அவருக்கு மணிக்கட்டில் ஊசி (கனூலா)மூலம் மருந்து செலுத்தப்பட்டது. ஓரிரு நாட்களில் கை மணிக்கட்டு வீக்கமடைந்த நிலையில் கையின் செயல்பாடு மணிக்கட்டுடன் செயலற்று போனதாகக் கூறி அந்தப் பகுதி வெட்டி அகற்றப்பட்டது.

இந்த விடயத்தில் மருத்துவத் தவறு நேர்ந்துள்ளதாக சிறுமியின் பெற்றோர் குற்றஞ்சாட்டியதுடன் பல்வேறு தரப்பினரிடம் தமக்கான நீதியையும் கோரியிருந்தனர்.

அது தொடர்பில் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டு வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வருகிறது. இந்நிலையில் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டபோது கடந்த தவணையின்போது மூன்று மருத்துவர்களை சந்தேகநபர்களாகப் பெயரிடப் போவதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

ஆனால், அவர்களைச் சந்தேக நபர்களாகப் பெயரிட வேண்டிய அவசியம் இல்லை என வழக்கு விசாரணையில் பொலிஸார் தெரிவித்தனர்.

இதையடுத்தே, கடந்த இரண்டரை வருடங்களுக்கும் மேலாக நீடித்துவரும் இந்த வழக்கை பொலிஸார் கையாளும் விதம் தொடர்பில் நீதிவான் தனது கடுமையான அதிருப்தியைத் தெரிவித்தார்.

மருத்துவர்களைக் கைது செய்யாத பொலிஸார், தாதியர்களைக் கைது செய்து சந்தேக நபர்களாக முற்படுத்தி உள்ளனர். ஒரே வழக்கில், இருவேறு நிலைப்பாட்டுடன் பொலிஸார் செயல்படுகின்றனர்.

அத்துடன், இந்த வழக்கில் பொலிஸார் திட்டமிட்ட வகையிலும், அல்லது முறையற்ற விசாரணைகள் காரணமாகவும் நீண்ட தாமதங்களை ஏற்படுத்துகின்றனர். பொலிஸாரின் செயல்பாட்டில் இந்த நீதிமன்றம் திருப்தியடையவில்லை.

தமக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமையவே தாம் சிறுமிக்கு மருந்து ஏற்றினோம் என்று பொலிஸாரின் விசாரணையிலும், திறந்த நீதிமன்றத்திலும் தாதியர்கள் வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

அத்துடன், சிறுமிக்கான சிகிச்சைக் குறிப்பில் மருந்தைச் செலுத்தவேண்டிய அளவீடுகள் குறிக்கப்படவில்லை என்றே நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் காண்பிக்கின்றன. ஆதலால், பொலிஸாரின் முன்பின் முரணான செயல் பாடுகளை ஏற்றுக் கொள்ள முடியாது.

மருத்துவர்களைக் கைது செய்வதற்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் அனுமதி பெறவேண்டியுள்ளது என்றுவிட்டு, தற்போது அவர்களைச் சந்தேக நபர்களாகப் பெயரிட வேண்டிய தேவை இல்லை என்கின்றனர்.

நீதி கிடைக்கும் என்று நம்பியே மக்கள் நீதிமன்றத்துக்கு வருகின்றனர். ஆனால், பொலிஸாரின் செயற்பாடு மக்களுக்கு அநீதியை வெளிப்படுத்துகிறது.

எனவே, வடமாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபரின் தலைமையில் இந்த விடயத்தில் முறையான விசாரணைகள் இடம்பெறவேண்டும்.

இந்த வழக்கு தொடர்பான குறிப்புகள் பொலிஸ்மா அதிபரின் விசேட அவதானத்துக்காக அனுப்பப்படவேண்டும். தேவையேற்படின் இந்த வழக்கை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு பாரப்படுத்தவேண்டிய நிலை ஏற்படலாம்" என நீதிவான் தெரிவித்தார். (அ)

# முல்லைத்தீவு செயலகத்தில் நேற்று தைப்பூச நிகழ்வு


யாழ்ப்பாணம், பெப். 03

இந்துக்களின் முக்கிய சமயச் சடங்குகளில் ஒன்றான தைப்பூச நிகழ்வு நேற்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி எஸ். மஞ்சுளாதேவி தலைமையில் சிறப்புற நடைபெற்றது.

முருகப்பெருமானுக்கு கடைப்பிடிக்கப்படும் விரதங்களில் முக்கியமான விரதமாக தைப்பூசம் இந்துக்களின் சமயச் சடங்காக பண்பாட்டு விழுமியங்களுடன் நடைபெறுகின்றமை முக்கியமான அம்சமாகும்.

மும்மாரி பொழிந்து வயல் நிலம் செழிர்த்து அறுவடையின் ஆரம்பமாக தைப்பூசத்தில் புதிர் எடுத்து அவற்றில் பொங்கல் பொங்கி வழிபடுகின்றமை தமிழர் தம் பாரம்பரியத்தின் மரபியல் நடைமுறையாகும். இந்த நெறிமுறையோடு நேற்று தைப்பூச நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் கோலாகலமாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.ஜெயக்காந்த் (காணி), மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)



# கிளிநொச்சி ரயில் நிலையத்தில் நேற்று சிரமதானம் முன்னெடுப்பு

கிளிநொச்சி, பெப். 03

கிளீன் சிறிலங்கா வேலைத் திட்டத்தின் கீழ், பொலிசாரின் ஏற்பாட்டில், கிளிநொச்சி புகையிரத நிலைய வளாகத்தில், நேற்று சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி முகமட் சுல்தான் நஜீம் தலைமையில் இடம்பெற்ற சிரமதானப் பணியில், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அங்கமன பங்கேற்றார்.

இதில், பொலிசாருடன், சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினர் இணைந்து கொண்டனர். இதன்போது, புகையிரத நிலைய வளாகத்தில் மரக்கன்றுகளும் நாட்டி வைக்கப்பட்டன. (அ)

# சுதந்திர தினத்தன்று கரிநாள் மல்லாவி வர்த்தகர்கள் ஆதரவு

முல்லைத்தீவு, பெப். 03

இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாளாக பிரகடனப்படுத்தவேண்டும் என அழைப்பு விடுத்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துக்கு ஆதரவாக மல்லாவி வர்த்தக சங்கமும் வர்த்தக நிலையங்களை பூட்டி ஆதரவு தெரிவிப்பதாக மல்லாவி வர்த்தக சங்கத் தின் தலைவர் விஜயகுமார் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் கோரிக்கைக்கமைவாகவும் சுதந்திர தினத்தை கரிநாளாக ஏற்று எதிர்வரும் 4 ஆம் திகதி மல்லாவி நகரில் சகல கடைகளையும் பூட்டி ஆதரவு தெரிவிக்கின்றோம்-என்றார்.

# வெலிகம பிரதேச சபைக்கு புதிய தவிசாளர்

கொழும்பு, பெப். 03

வெலிகம பிரதேச சபையின் புதிய தவிசாளராக தேசிய மக்கள் சக்தியின் சிந்தக்க ஹேவா பத்திரண நேற்று தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வாக்கெடுப்பில் அவருக்கு ஆதரவாக 22 வாக்குகளும், எதிராக 21 வாக்குகளும் கிடைத்தன. ஒரு மேலதிக வாக்கினால் வெலிகம பிரதேச சபையின் அதிகாரத்தை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியுள்ளது.

# 2009ஆம் ஆண்டு வரை வட, கிழக்கில் போதைப்பொருள் பாவனை பூச்சியம்

## அருட்தந்தை வசந்தன் அடிகளார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 03

2009ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு முன்னர் வட, கிழக்கில் போதைப்பொருள் பாவனை பூச்சியமாக இருந்ததாக கட்டைக்காடு ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை வசந்தன் தெரிவித்துள்ளார்.

கட்டைக்காடு சென்மேரிஸ் விளையாட்டு கழகம் நடாத்திய உதைபந்தாட்ட தொடரின் இறுதிப் போட்டியில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் போதைப்பொருளின் தாக்கம் அதிகரித்துள்ளது. குறிப்பாக தமிழர் தாயகம் வரலாறு காணாத அளவுக்கு போதைப்பொருளின் தாக்கத்தால் பாதிப்படைந்துள்ளது.

பலர் இந்த போதைப் பொருளுக்கு நாளாந்தம் அடிமையாகிக் கொண்டிருக்கிறார்கள். போதைப் பொருள் தொடர்பான செய்திகளை நாங்கள் அடிக்கடி பத்திரிகைகள் வாயிலாக பார்க்கின்றோம்.


விளையாட்டில் ஈடுபடும் வீரர்கள் தங்களுக்குள் ஒழுக்க விழுமியங்களை கொண்டிருக்க வேண்டும். அதுதான் எங்களுடைய கடந்த கால வரலாறு.

அதிகமானவர்களுக்கு தெரிந்திருக்கும் 2009ஆம் ஆண்டுக்கு முன்னரான காலப் பகுதிகளில் தமிழர் தாயகத்தில் போதைப் பொருள் பூச்சியமாக இருந்தது.

ஆனால், இப்போது போதைப்பொருள் தொடர்பான புதுப்புது விடயங்களை நாங்கள் அறிந்து கொண்டிருக்கிறோம். 2009 ஆண்டுக்கு முன்னர் இருந்த வாழ்வியலை மீண்டும் கட்டியெழுப்பி நாம் அனைவரும் போதையற்ற ஒழுக்க சீலர்களாக சமூகத்தில் ஆரோக்கியமாக வாழ வேண்டும்-என்றார். (அ)

# கீரிமலை சிவனுக்கு நேற்று கொடியேற்றம்





யாழ்ப்பாணம், பெப். 03

வரலாற்றுச் சிறப்புமிக்க நகுலாம்பிகாதேவி நகுலேச்சரம் ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்று முற்பகல் 10.00 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

நேற்று ஆலயத்தில் பூஜைகள் இடம்பெற்று சுவாமி உள்வீதி வலம்வந்து கொடியேற்ற திருவிழா முன்னெடுக்கப்பட்டது.

நேற்று ஆரம்பமான வருடாந்த மகோற்சவத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி காலை தேர்த் திருவிழாவும் இரவு சிவராத்திரியும் இடம்பெற்று மறுநாள் கண்டகி தீர்த்தத்தில் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
03.02.2026 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், தை 20

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# தமிழ் கட்சிகள் செய்ய வேண்டியது

வவுனியா - கிவுல் ஓயாத் திட்டத்துக்கான அரசியல் எதிர்ப்பானது ஒப்பீட்டடிப்படையில் பெருமளவில் மக்களை ஒன்று திரட்டியிருக்கிறது. இதனை விடவும் பங்குகொண்டிருக்கவேண்டும். எனினும், ஒப்பீட்டடிப்படையில் தமிழ் கட்சிகளின் ஒழுங்குடுத்தலில் முன்னேற்றம் தெரிகிறது. அரசாங்கம் திட்டமிட்டு இனப்பரம்பலை மாற்றியமைக்க முயற்சிக்கிறது. இதனால், தமிழ் மக்களின் வளங்களும் பொருளதாரமும் அழியப் போகின்றது என்பதுதான் பிரதான குற்றச்சாட்டு. அரசாங்கங்கள் வடக்கு, கிழக்கில் திட்டங்களை மேற்கொள்ள முயற்சிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமிழ் கட்சிகள் இவ்வாறு கூறுவதும் பின்னர் புதியதொரு பிரச்னை வந்தவுடன் பழையதை மறந்துவிடுவதும் வழமையானது.

இந்த விடயத்திலும் அவ்வறுதான் நடக்கப்போகிறது? வடக்கு, கிழக்கில் அபிவிருத்தித் திட்டங்கள் இடம்பெறவேண்டும். ஆனால், அவ்வாறான திட்டங்கள் ஒப்பீட்டடிப்படையில் தமிழ் மக்களின் இருப்பை பெருமளவில் பாதிக்கப்படுவதும் தடுக்கப்பட வேண்டும் என்பதைத் தான் கட்சிகள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இந்த அடிப்படையில் நோக்கினால் குறித்த திட்டம் முன்னெடுக்கப் படுவதால் எவ்வாறு தமிழ் மக்கள் பாதிக்கப்படுவர் என்பதுதன் இந்தத் திட்டத்தை எவ்வாறு மேற்கொண்டால் மக்களுக்குப் பாதிப்பில்லாமல் திட்டத்தை முன்னெடுக்கலாம் என்பது பற்றியும் ஒரு மூலோபாய அறிக்கையை தயாரிக்க வேண்டும். அதனை அரசாங்கத்துக்கும் அதேவேளை கொழும்பின் இராஜதந்திர தரப்புகளுக்கும் வழங்க வேண்டும்.

வெறும் எதிர்ப்புகளுக்கு அப்பால் எதிர்ப்பை எவ்வாறு ஆக்கபூர்வமான எதிர்ப்பாக மாற்றுவது என்பது தொடர்பில்தான் தமிழ் கட்சிகளின் தலைமைகள் என்போர் சிந்திக்கவேண்டும். இந்த அணுகுமுறை தமிழ் கட்சிகள் மத்தியில் இல்லை. இப்போது, பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பிலும் இவ்வாறான அணுகுமுறையிலேயே அனைவரும் பயணிக்கின்றனர். தடைச் சட்டமே வேண்டாம் என்பதற்கும் கொண்டுவருவதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், இவ்வாறான அடிப்படையில் அது கொண்டுவரப்பட வேண்டும் என்னும் அடிப்படையில்தான் விடயங்களை முன்வைக்கவேண்டும்.

ஆனால், இந்த அடிப்படையில் விடயம் இதுவரையில் நோக்கப்படவில்லை. ஏனெனில், பயங்கரவாத முறியடிப்பு என்பது இன்றைய உலக அரசியலில் ஓர் அங்கமாகிவிட்டது. இந்தநிலையில் அனைத்து நாடுகளிலும் இருக்கின்ற ஒன்று இலங்கையில் மட்டும் இருக்கக் கூடாது என்று வாதிடும்போது, அதிலும் கடந்தகாலத்தில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட, அதனை ஆதரித்த தமிழ் கட்சிகள் வாதிடுகின்றபோது அந்த வாதம் தர்க்க ரீதியில் ஏற்புடைய ஒன்றாக இருக்கப் போவதில்லை.

எனவே, ஒரு விடயத்தை எதிர்க்கும்போது, மற்றவர்களின் ஆதரவை வெற்றி கொள்ளும்நோக்கில் அந்த எதிர்ப்பை எவ்வாறு வடிவமைப்பது என்பது தொடர்பில் தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்கள், சிவில் சமூகம் என்போர் இனியாவது சிந்திக்க முன்வரவேண்டும். அவ்வாறில்லாதபோது, எதிர்ப்புகள் ஒருநாள் ஆட்டமாகவே முடிந்துபோகும். அப்படித்தான் இதுவரையில் நடந்திருக்கிறது.

# 16 வயதுக்குட்பட்டோருக்கு சமூக வலைத்தள தடை; முன்மொழிவு மகளிர்,சிறுவர் விவகார அமைச்சிடம்

கொழும்பு, பெப். 03

இலங்கையில் 16 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதைத் தடை செய்வதற்கான உத்தியோகபூர்வ முன்மொழிவு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவரும் ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதியுமான இனோகா ரணசிங்க, இதற்கான சட்ட ஏற்பாடுகளைத் தயாரிப்பதற்குச் சற்று கால அவகாசம் எடுக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

இந்தத் தடையை நடைமுறைப்படுத்த நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், ஆரம்ப கால சிறுவர் அபிவிருத்திக்கான தேசிய செயலகம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை ஆகிய மூன்று நிறுவனங்களின் ஆலோசனைகள் அவசியமாகும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மகளிர் மற்றும் சிறுவர் விவகார பிரதி அமைச்சர் நாமல் சுதர்சன இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில்- சிறுவர்கள் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதை ஒழுங்குபடுத்த வேண்டிய தேவை ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளது.

இது குறித்த விரிவான கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன-என்றார்.

இலங்கை சமூக மருத்துவ நிபுணர்கள் கல்லூரி வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையின்படி, கட்டுப்பாடற்ற சமூக வலைத்தள பயன்பாடு சிறுவர்களின் உடல் மற்றும் மன நலனைப் பாதிப்பதாகத் தெரிவித்துள்ளது.

மன அழுத்தம், மனச்சோர்வு, தூக்கமின்மை மற்றும் உடல் தோற்றம் குறித்த அதிருப்தி. இணையவழி துன்புறுத்தல், வன்முறை மற்றும் தவறான உள்ளடக்கங்களை எதிர்கொள்ளுதல்.

8-12 வயதுடைய சிறுவர்கள் ஒரு நாளைக்குச் சராசரியாக 5 மணிநேரமும், இளைஞர்கள் 7 மணிநேரமும் திரைகளுக்கு முன்னால் செலவிடுகின்றனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

டிஜிற்றல் தொழில்நுட்பத்தின் நன்மைகளைத் தடுப்பது இதன் நோக்கமல்ல. மாறாக, சிறுவர்களின் ஆரோக்கியமான வளர்ச் சிக்கு உகந்த பாதுகாப்பான சூழலை உருவாக்குவதே இதன் இலக்கு என மருத்துவ நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (அ)

# சிவில் பாதுகாப்பு திணைக்களம் கலைக்கப்படாது

கொழும்பு, பெப். 03

இலங்கை சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தைச் சேர்ந்த 15,000 பணியாளர்களை வனவிலங்கு பாதுகாப்பு மற்றும் பொலிஸ் திணைக்களங்களுக்கு மாற்ற அரசாங்கம் தீர்மானித்துள்ளது. எனினும், இந்தத் திணைக்களம் கலைக்கப்படமாட்டாது எனப் பொதுப் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால தெளிவுபடுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

திணைக்களத்தின் மொத்தமுள்ள 32,000 பணியாளர்களில் சுமார் பாதிப் பேர் தற்போது புதிய கடமைகளுக்காக மாற்றப்படுகின்றனர். 5,000 அதிகாரிகள் வன உத்தியோகத்தர்களாக மாற்றப்படுவர்.

இது நாட்டில் அதிகரித்து வரும் மனித-யானை மோதல்களைக் கட்டுப்படுத்தவும், இயற்கை வளங்களைப் பாதுகாக்கவும் உதவும்.

10,000 அதிகாரிகள் பொலிஸ் திணைக்களத்தில் பாதுகாப்பு மற்றும் பொலிஸ் பணிகளுக்காக இணைக்கப்படவுள்ளனர்.

தற்போது பொலிஸ்துறையில் நிலவும் 30,000 பணியாளர் வெற்றிடங்களை நிரப்ப இது உதவும்.

யுத்த காலத்தில் கிராமங்களின் பாதுகாப்பிற்காக உருவாக்கப்பட்ட இந்தத் திணைக்களத்தின் தற்போதைய தேவைகளைக் கருத்தில் கொண்டு இந்த மறுசீரமைப்பு செய்யப்படுகிறது.

சிவில் பாதுகாப்புத் திணைக்களம் கலைக்கப்படவில்லை, மாறாக அதன் வளங்கள் திறம்பட மீள் விநியோகம் செய்யப்படுகின்றன.

வரி செலுத்துவோர் மீது மேலதிக சுமையை ஏற்றாமல், இருக்கும் வளங்களைக் கொண்டே ஏனைய திணைக்களங்களின் பணியாளர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்கிறோம். இந்த இடமாற்றங்கள் காரணமாக எந்தவொரு அதிகாரியின் வேலைப் பாதுகாப்பும் பாதிக்கப்படாது என உறுதி அளிக்கப்பட்டுள்ளது.




மாற்றப்பட்ட பணியாளர்கள் தவிர எஞ்சியுள்ள அதிகாரிகள் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் தொடர்ந்து இயங்குவார்கள் மற்றும் அதன் விசேட திட்டங்களைக் கவனிப்பார்கள்.


இந்த நியமனங்களை உறுதிப்படுத்துவதற்கான சட்ட ரீதியான ஆவணங்கள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன.

யுத்தத்திற்குப் பின்னரான தற்போதைய சூழலில், நாட்டின் பாதுகாப்புக் கட்டமைப்பை நவீன சவால்களுக்கு ஏற்ப மாற்றியமைக்கும் முயற்சியாக இது பார்க்கப்படுகிறது-என்றார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேஷம்:** கலைப் பொருட்கள் வாங்குவீர்கள். எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். உத்தியோகத்தில் அமைதி நிலவும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**இடபம்:** சொத்து வாங்குவது விற்பது லாபகரமாக அமையும். அரசால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**மிதுனம்:** கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் லாபம் உண்டு. இழந்த உரிமையை பெறுவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**கடகம்:** ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில்அதிகாரிகளால்அலைக்கழிக்கப்படுவீர்கள்.

**சிம்மம்:** சில காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். வாகனம் அடிக்கடி தொந்தரவு தரும். வியாபாரத்தில் ஓரளவு லாபம் வரும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கன்னி:** பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வாகன வசதிப் பெருகும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். பாராட்டப்படுவீர்கள். சிந்தனைத் திறன் பெருகும்.

**துலாம்:** உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கு ஏற்ப மாற்றியமைத்துக் கொள்வீர்கள். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள். உங்களின் ஆலோசனையை ஏற்கப்படும்.

**விருச்சிகம்:** கணவன்-மனைவிக்குள் அன்னியோன்யம் பிறக்கும். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். சக புதிய சலுகைகள் கிடைக்கும்.

**தனுசு:** சந்திராஷ்டமம் இருப்பதால் மனஇறுக்கங்கள் உருவாகும். விமர்சனம் கண்டு அஞ்ச வேணடாம். வியாபாரத்தில் லாபம் மந்தமாக இருக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி குறை கூறுவார்.

**மகரம்:** விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். கல்யாண பேச்சு வார்த்தை வெற்றியடையும். சகோதரங்களால் ஆதாயம் அடைவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை மதித்து பேசுவார்.

**கும்பம்:** உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். எதிர்பாராத பணவரவு உண்டு. வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். மூத்த அதிகாரி சில பொறுப்புகளை ஒப்படைப்பார்.

**மீனம்:** சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள்.நினைத்தது நிறைவேறும் நாள்.

# பூந்தோட்டம் வீதியில் விபத்து: 2 பெண்கள் உட்பட 7 பேர் காயம்



வவுனியா, பெப். 03

வவுனியா- பூந்தோட்டம் பிரதான வீதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் இரண்டு பெண்கள் உட்பட ஏழு பேர் காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

வவுனியா நகரிலிருந்து பூந்தோட்டம் பகுதி நோக்கி சென்று கொண்டிருந்த ஓட்டோவும் பூந்தோட்டம் பகுதியிலிருந்து வவுனியா நகர் நோக்கி சென்று கொண்டிருந்த மற்றுமொரு ஓட்டோவும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் இரு ஓட்டோக்களின் சாரதிகள் உட்பட அதில் பயணம் செய்த இரு பெண்கள் என 7 பேர் காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்துக்கு சென்ற வவுனியா போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

வவுனியா நகரிலிருந்து பூந்தோட்டம் செல்லும் பிரதான வீதியில் அண்மைய நாட்களாக விபத்து சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(எ-10)

# வவுனியாவில் வாக்காளர் தினம்



வவுனியா, பெப். 03

தேர்தல் ஆணைக்குழு மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலகம் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பில் தேசிய வாக்காளர் தின நிகழ்வு வவுனியா மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இந்த நிகழ்வு நடைபெற்றது.

தற்போதைய டிஜிற்றல் பயன்பாட்டில் தேர்தல் ஆணைக்குழு எவ்வாறான சேவைகளை முன்னெடுக்கின்றன, சமூக பயன்பாட்டில் தேர்தல் விதிமுறை மீறல்கள் மற்றும் நன்மைகள், புதிய தொழில்நுட்ப பயன்பாடு, போலிச் செய்திகள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டன.

டிஜிற்றல் பயன்பாட்டின் ஊடாக ஜனநாயகத்தை வலுப்படுத்தல் எனும் எண்ணக்கருவில் நடைபெற்ற இந்த தேசிய வாக்காளர் தின நிகழ்வில் தேர்தல் ஆணைக்குழு பிரதிநிதிகள், மாவட்ட செயலக அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர்கள், அரச மற்றும் அரச சார்பற்ற அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(எ-10)

# கிவுல் ஓயா திட்டம் குறித்து விழிப்புணர்வு கருத்தரங்கு

முல்லைத்தீவு, பெப். 03

கிவுல் ஓயா நீர்த்தேக்க மேம்பாட்டுத்திட்டம் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு ஏற்பாட்டில் நேற்று முன்தினம் முல்லைத்தீவு- கரைத்துறைப் பற்று பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கில் கிழக்கு மாகாண ஓய்வுபெற்ற முன்னாள் காணி ஆணையாளர் க. குருநாதன் வளவாளராக கலந்துகொண்டதுடன், இதில் வவுனியா வடக்கு பிரதேச சபை உபதவிசாளர், வவுனியா வடக்கு, கரைத்துறைப் பற்று மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர்கள், கிவுல் ஓயா திட்டத்தால் பாதிக்கப்படும் மக்கள், சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.(எ)

# கிளிநொச்சியில் 3 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து

## மூவர் மருத்துவமனையில் அனுமதி



கிளிநொச்சி, பெப். 03

மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி இடம்பெற்ற கோர விபத்தில் காயமடைந்த மூவர் கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செல்வபுரம் பகுதியில் ஏ-9 வீதியில் இந்த விபத்து நேற்று முன்தினம் பிற்பகல் 03.00 மணியளவில் இடம்பெற்றது.

கொழும்பு நோக்கிப் பயணித்த கார் ஒன்றின் சில்லில் காற்று இறங்கிய நிலையில், கட்டுப்பாட்டை இழந்த கார் எதிரே பயணித்த வானுடன் மோதியதுடன் மற்றுமொரு வானுடனும் மோதி விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், காயமடைந்தவர்கள் பிரதேச மக்களின் உதவியுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

குறித்த விபத்து காரணமாக ஏ- 9 வீதி ஊடான போக்குவரத்து அரை மணிநேரத்துககு மேல் பாதிக்கப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18 வயதுக்கு குறைந்த சிறுவர்கள் சட்டவிரோதமான தொழில்களில்!

## விடயம் தொழில் அமைச்சின் கவனத்துக்கு

கொழும்பு, பெப். 03

இலங்கையில் 18 வயதுக்குக் குறைவான சில சிறுவர்கள் சட்டவிரோத சிறுவர் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது தொழில் அமைச்சின் கவனத்துக்குவந்துள்ளது.

குறிப்பாக, பாடசாலை சீருடை அணிந்தபடியே வேலைக்குச் செல்லும் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இது சந்தேகத்திலிருந்து தப்பிக்கவும், பாடசாலையிருந்து வீடு திரும்புவதாக தோற்றமளிக்கவும் செய்யப்படுவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

தொழில் அமைச்சின் செயலாளர் எஸ்.எம். பியதிஸ்ஸ இது குறித்து தெரிவித்ததாவது-பொருளாதார சிரமங்கள் காரணமாக சில குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் கல்வியை விடுத்து வருமானம் ஈட்டும் செயல்பாடுகளில் ஈடுபட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

பாடசாலை செல்வதற்குப் பதிலாக, பாடசாலை சீருடை அணிந்தபடியே பல்வேறு வேலைகளில் ஈடுபடும் சிறுவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மேலும், சில மாணவர்கள் பிச்சை எடுக்கும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ள சம்பவங்களும் உள்ளன.

இந்தப் பிரச்னையை சமாளிக்க கடுமையான சட்டங்கள் அமுலில் உள்ளன. இதைத் தீர்க்க மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சுடன் இணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

குழந்தைத் தொழில் அதிகளவில் பதிவாகும் துறை பெரும் தோட்டத் துறையாகும். இதே போக்கு மீன்பிடித் துறையிலும் சுற்றுலா துறையிலும் காணப்படுகின்றது. அதேவேளை, மீனவர் குடும்பத்தைச் சேர்ந்த குழந்தை பெற்றோருக்கு உதவுவது எல்லாக் காலங்களிலும் குழந்தைத் தொழிலாகக் கருதப்படாது-என்றார். (அ)

# ரூ.80 லட்சம் பெறுமதியான ஐஸுடன் தம்பதியர் கைது!

கொழும்பு, பெப். 03

புத்தளம் பொலிஸாரின் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட சோதனையின்போது, சுமார் 80 இலட்சம் ரூபாய் பெறுமதியான 524 கிராம் ஐஸ் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் தம்பதியர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சம்பவம் தொடர்பில் ஆனைமடு பகுதியைச் சேர்ந்த 28 மற்றும் 23 வயதுடைய தம்பதியினரே நேற்று முன் தினம் புத்தளம்-மெல்லன்குளம் பகுதியில் வைத்து இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இப்பாகமுவ பகுதியில் உள்ள தமது பாட்டியின் வீட்டில் தங்கியிருந்து போதைப்பொருள் வியாபாரத்தை முன்னெடுத்து வந்துள்ளமை பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, போதைப்பொருள் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட கார் ஒன்றும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் புத்தளம் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் உள்ள இளைஞர்களுக்கு, வெளிப் பகுதிகளில் இருந்து போதைப் பொருளைக் கொண்டு வந்து விற்பனை செய்யும் தம்பதியர் குறித்து பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

இதனடிப்படையில், சுமார் ஒரு மாத காலமாக முன்னெடுக்கப்பட்ட இரகசிய கண்காணிப்பு நடவடிக்கையைத் தொடர்ந்து, போதைப்பொருளைக் கடத்திச் சென்றபோதே குறித்த தம்பதியர் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# பொலிஸ் நிலையத்தில் துப்பாக்கி மாயம் பொலிஸ் பரிசோதர், கான்ஸ்டபிள் கைது!

கொழும்பு, பெப். 03

மத்துகம பொலிஸ் நிலையத்தில் இருந்து ஒரு கைத்துப்பாக்கி மற்றும் 10 தோட்டாக்களுடன் ஒரு மகசின் காணாமற்போன விவகாரம் குறித்து பொலிஸ் பரிசோதகர் ஒருவரும் கான்ஸ்டபிள் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆவணச் சரிபார்ப்பின்போது, ஜனவரி 26 ஆம் திகதி முதல் தொடர்புடைய ஆயுதம் மற்றும் தோட்டாக்கள் காணாமல் போனமை தெரியவந்தது.

காணாமற்போனது மத்துகம பொலிஸ் துணைப் படையினரின் காவலில் இருந்த ஒரு கைத்துப்பாக்கி மற்றும் 10 தோட்டாக்கள் அடங்கிய ஒரு மகசின் ஆகும்.

இந்த சம்பவம் தொடர்பில் மத்துகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# போதைப்பொருள் சோதனைக்கு சென்ற பொலிஸாரை தாக்கிய நபர்கள் கைது!

கொழும்பு, பெப். 03

போதைப்பொருள் சோதனையில் ஈடுபடச் சென்ற பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்றைத் தாக்கிய குற்றச்சாட்டில் நான்கு பேர் மஹறா ஓயா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மஹறா ஓயா பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவொன்று, நேற்று முன் தினம் இரவு கல்வலயாய 1000 ஏக்கர் பகுதியில் போதைப்பொருள் சோதனையில் ஈடுபட்டிருந்தபோது, அங்கு வந்த நான்கு நபர்களால் பொலிஸார் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் சிகிச்சைக்காக மஹறா ஓயா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலை நடத்திய சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# வெளிநாட்டுப் பெண்ணின் கைபேசி திருடியவர் கைது!

கொழும்பு, பெப். 03

ரஷ்ய நாட்டுப் பெண் ஒருவரிடமிருந்த சுமார் 3 இலட்சம் ரூபாய் பெறுமதியான கையடக்கத் தொலைபேசியைத் திருடிய நபர் ஒருவரை, உனவட்டுன சுற்றுலாப் பொலிஸ் பிரிவின் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

குறித்த வெளிநாட்டுப் பெண் செய்த முறைப்பாட்டுக்கு அமைய முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின்போதே இந்தச் சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து, அப்பெண்ணுக்குச் சொந்தமான கையடக்கத் தொலைபேசியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதான சந்தேகநபர் தொடர்பில் மேலதிக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# இந்தியாவிலிருந்து வரும் புனித சின்னங்கள்!

கொழும்பு, பெப். 03

இந்தியாவிலிருந்து கொண்டுவரப்படும் புனித சின்னங்கள் எதிர்வரும் 4 ஆம் திகதி இலங்கையை வந்தடையவுள்ளன.

இதனை முன்னிட்டு கொழும்பு கங்காராமய விகாரையை சூழவுள்ள பகுதிகளில் விசேட போக்குவரத்து மற்றும் பாதுகாப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்த அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

இதன்படி புனித சின்னங்கள் எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்படும்.

கண்காட்சி நடைபெறும் நாட்களில் விகாரையை சூழவுள்ள பல வீதிகள் தற்காலிகமாக மூடப்படும் என்பதுடன், கனரக வாகனங்களின் நடமாட்டமும் அந்த பகுதிகளில் மட்டுப்படுத்தப்படும்.

கண்காட்சிக்கு வரும் பக்தர்கள் ஒதுக்கப்பட்ட வாகன தரிப்பிடங்களைப் பயன்படுத்துமாறும், பாதுகாப்பு நடைமுறைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை புத்தர் சிலை விவகாரம் தேரர்களுக்கு மீள விளக்கமறியல்

திருகோணமலை, பெப். 03

திருகோணமலை பகுதியில் புத்தர் சிலை வைக்கப்பட்டமை தொடர்பான சம்பவத்தின் அடிப்படையில், பலாங்கொட கஸ்ஸப தேரர் உள்ளிட்ட நான்கு பிக்குகள் மற்றும் மேலும் 5 சந்தேகநபர்களை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

திருகோணமலையிலுள்ள விகாரையொன்றில் வைக்கப்பட்டிருந்த புத்தர் சிலையை அகற்றுவதற்கு முற்பட்டதையடுத்து, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 16ஆம் திகதி அங்கு அமைதியற்ற சூழல் ஏற்பட்டிருந்தது.

எனினும், குறித்த கட்டுமானங்கள் அனுமதியின்றி முன்னெடுக்கப்பட்டதாக கூறி, கடலோர பாதுகாப்புத் திணைக்களம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்திருந்தது.

இந்த நிலையில், புத்தர் சிலையை அகற்ற முயற்சித்த போது, பிக்குகளால் பொலிஸாருக்கு எதிராக கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, சம்பந்தப்பட்ட தரப்பினர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போது, குறித்த குழுவினரை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 9ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (எ)

# மாணவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி

கல்முனை, பெப். 03

கல்முனை அல்-அஸ்ஹர் வித்தியாலயத்தில் மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி நேற்று முன்தினம் பாடசாலை மண்டபத்தில் அதிபர் எஸ். நிஸானா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வளவாளராக இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிர்வாக சம்மாந்துறை நிலையத்தின் ஆங்கில துறைத் தலைவர் பி. நௌசாத் கலந்து கொண்டு, மாணவர்களுக்கு தலைமைத்துவ திறன்கள், தன்முனை வளர்ச்சி, தொடர்பாடல் திறன், குழுப்பணி மற்றும் எதிர்கால இலக்குகள் தொடர்பில் பயனுள்ள கருத்துக்களை வழங்கினார்.

மாணவர்கள் எதிர்காலத்தில் சிறந்த தலைவர்களாக உருவெடுப்பதற்கான வழிகாட்டல்களையும், நடைமுறை உதாரணங்களுடன் கூடிய பயிற்சிகளையும் அவர் வழங்கினார். (எ-06)





நுவரெலியா மாவட்டத்தின் மிகவும் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றான தலவாக்கலை அருள்மிகு சிறீ கதிரேசன் பெருமான் தேவஸ்தானத்தின் தைப்பூச திருவிழாவை முன்னிட்டு முத்தேர் பவனி நேற்று முன்தினம் நடைபெற்றது.

அரசியலில் மாற்றம் செய்தது போல

# "கல்வி மறுசீரமைப்பு ஊடாக புதிய மாற்றங்கள் உருவாகும்"

மட்டக்களப்பு, பெப். 03

நாட்டில் புதியதொரு அரசியல் மாற்றம் ஏற்பட்டதைப் போன்று, கல்வி மறுசீரமைப்பு ஊடாக புதிய மாற்றங்களை நாம் உருவாக்க உள்ளோம். இந்த புதிய கல்விச் சீரமைப்பு தொடர்பில் எதிர்ப்பினைத் தெரிவிப்பவர்களுக்குச் சரியான புரிதல் இல்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், "எமது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பொறுப்பேற்பதற்கு முன்னர் பல ஊழல் மோசடிகள் நிறைந்த நாடாக இலங்கை காணப்பட்டது. இப்போது ஊழல் - மோசடிகள் மற்றும் இலஞ்ச ஊழல்களை வெகுவாக குறைத்து வருகிறோம். ஊழல் - மோசடி குறைந்த நாடுகளின் பட்டியலில் இலங்கை சேர்க்கப்பட்டிருக்கிறது. வெகு விரைவில் இந்த நாட்டில் ஊழல் மோசடிகளை முற்றாக ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறோம்.

தற்போது வீட்டிலிருந்தவாறே அரச துறைக்கான கட்டணங்களைச் செலுத்தி தமக்கான சேவைகளை பொதுமக்கள் பெற்றுக் கொள்வதற்கான தொழில்நுட்ப வசதியை எமது அரசாங்கம் உருவாக்கியுள்ளது. அதுமட்டுமல்லாது, உங்கள் பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழைக்கூட வீட்டிலிருந்தவாறு பெற்றுக் கொள்வதற்கான தொழில்நுட்ப வசதியை நாம் தற்போது ஏற்படுத்தியுள்ளோம். அதையும் தாண்டி தற்போது போக்குவரத்து பொலிஸாரின் தண்டப்பணங்களை செலுத்துவதற்காகவும் டிஜிற்றல் மயமாக்கலை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

எம்மை அண்மித்த இந்தியா போன்ற நாடுகள் புதிய தொழில்நுட்பங்களின் ஊடாகத் தங்களது சேவைகளை விரிவுபடுத்தியிருக்கின்றன. பொருளாதார ரீதியாக அந்த நாடுகள் முன்னேற்றம் காண்பதற்கு அந்தத் தொழில்நுட்பமும் முக்கிய வகிபாகம் கொண்டுள்ளது. அதனைப் போன்றே நாங்களும் எமது நாட்டில் இவ்வாறான தொழில்நுட்ப முறைமைகளைக் கையாண்டு, நாட்டை ஒரு வளர்ச்சிப் பாதைக்கு மாற்றுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளோம்."- என்றார். (எ)

# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர்ந்து மழை பெய்யக்கூடும்

கொழும்பு, பெப். 03

வடக்கு, கிழக்கு, வடமத்திய, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் அத்துடன் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் இடைக்கிடையே மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களின் பல இடங்களிலும் அத்துடன் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் பல இடங்களிலும் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். சில இடங்களில் 50 மில்லிமீற்றர் வரையிலான ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும்.

மத்திய, சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அதிகாலை வேளையில் பனி மூட்டம் காணப்படும்.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பொத்துவில் தொடக்கம் மட்டக்களப்பு, திருகோணமலை ஊடாக காங்கேசன்துறை வரையான கடல் பிராந்தியங்களின் பல இடங்களில் மழை பெய்யக்கூடும்.

நாட்டைச் சூழ உள்ள ஏனைய கடல் பிராந்தியங்களின் பல இடங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 25 - 35 கிலோ மீற்றர் வேகத்தில் வட கிழக்குத் திசையில் இருந்து காற்று வீசும்.

களுத்துறை தொடக்கம் கொழும்பு, புத்தளம் ஊடாக மன்னார் வரையான அத்துடன் அம்பாந்தோட்டை தொடக்கம் பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 45 - 50 கிலோ மீற்றரிலும் கூடிய வேகத்தில் அடிக்கடி காற்று அதிகரித்து வீசக்கூடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இக் கடல் பிராந்தியங்கள் ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும்.

ஆனால், இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் பலத்த காற்று வீசுவதுடன் அவ்வேளைகளில் கடல் பிராந்தியங்கள் தற்காலிகமாக மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மோ.சைக்கிளுடன் சிறிய ரக வாகனம் மோதியதில் விபத்து!

ஒருவர் பலி! சாரதி கைது

மட்டக்களப்பு, பெப். 03


மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதியில், புனாணை 126 ஆம் மைல் கல் பகுதியில் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற கோர விபத்தில் மோட்டார் சைக்கிள் சாரதி உயிரிழந்தார். இந்த விபத்துடன் தொடர்புடைய சிறிய ரக வாகன சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்று வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

ரிதிதென்னையைச் சேர்ந்த சம்சுதீன் முஹம்மது நவாஸ் என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

சம்பவ தினத்தன்று இரவு 07. 00 மணியளவில், பொலநறுவையிலிருந்து கல்முனை நோக்கிப் பயணித்த சிறிய ரக வாகனம் ஓட்டமாவடியிலிருந்து ரிதிதென்ன நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் புனாணை பகுதியில் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். (எ)

பேருந்து விபத்து தவிர்ப்பு:

# சாரதியின் சாமர்த்தியத்தால் 40 பயணிகள் உயிர்தப்பினர்



கண்டி, பெப். 03

வலப்பனை பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை 50 அடி ஆழமான பள்ளத்தாக்கில் பேருந்து ஒன்று கவிழ்ந்து விழும் அபாயம் ஏற்பட்ட நிலையில், சாரதியின் துரிதமான நடவடிக்கையால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது.

நில்தண்டாஹின்னவிலிருந்து டெரிபஹ நோக்கிச் சென்ற இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான வலப்பனை சாலை பேருந்து, ராசிங்கொல்ல பகுதியில் உள்ள வளைவில் செல்லும்போது திடீரென இயந்திரக் கோளாறுக்கு உள்ளானது. அந்த நேரத்தில் பேருந்தில் சுமார் 40 பயணிகள் பயணம் செய்தனர்.

ரசிங்கொல்ல பகுதியில் உள்ள முதல் வளைவை கடக்கும் போது பேருந்தில் பலத்த சத்தம் கேட்டது. உடனடியாக பிரேக் பயன்படுத்தி வாகனத்தை நிறுத்தினேன் என சாரதி தெரிவித்தார்.

கீழே பார்த்தபோது செங்குத்தான பாறை தெரிந்தது. பரிசோதித்தபோது, பேருந்தின் இணைப்பு பகுதி இரண்டாக உடைந்திருந்ததை கண்டறிந்தேன் என சாரதி கூறினார்.

15 வருடங்களாக சேவையில் இருக்கும் அந்த சாரதி, டித்வா சூறாவளியால் ஏற்பட்ட சேதங்களுக்குப் பின்னர் இந்த வீதி மிகவும் ஆபத்தானதாக இருப்பதாக தெரிவித்தார்.

இந்த வீதியில் வாகனம் ஓட்டுவது கடும் சவாலாகவே உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சபாநாயகருக்கு...

சட்டத்தரணி மிதுன் டயஸ், தனது சேவைபெறுநர் இந்த முறைப்பாட்டை அரசாங்கத்திற்கு எதிராக அல்லாமல், சபாநாயகரின் ஊழல் நடவடிக்கைகளுக்கு எதிராகவே தாக்கல் செய்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

இந்த முறைப்பாடு குறித்து இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு பக்கச்சார்பற்ற விசாரணையை முன்னெடுக்கும் எனத் தாங்கள் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்ற பிரதி பொதுச்செயலாளர் சமிந்த குலரத்ன அண்மையில், பாராளுமன்றத்தின் பணியாளர் ஆலோசனைக் குழுவினால் பணி இடைநீக்கம் செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## திருமலை புத்தர்...

வைக்கப்பட்டிருந்த புத்தர் சிலையொன்றை அகற்றுவதற்கு அதிகாரிகள் முற்பட்டபோது அங்கு பெரும் பதற்றமான சூழல் உருவானது.

குறித்த கட்டுமானப் பணிகள் முறையான அனுமதியின்றி முன்னெடுக்கப்பட்டதாகக் கூறி, கடற்கரை பாதுகாப்புத் திணைக்களம் பொலிஸாரிடம் வழங்கிய முறைப்பாட்டையடுத்து இந்த அகற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

புத்தர் சிலையை அகற்ற முற்பட்டபோது, பலங்கொடை கஸ்ஸப தேரர் உள்ளிட்ட பிக்குகள் மற்றும் பிரதேச மக்கள் பொலிசாருக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதன் காரணமாக அங்கு அமைதியற்ற நிலை ஏற்பட்டதையடுத்து சட்டத்தை மீறியதாகக் குற்றம் சுமத்தப்பட்டு பிக்குகள் உள்ளிட்ட தரப்பினர் கைது செய்யப்பட்டனர்.

இந்த வழக்கு நேற்று திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது வணக்கத்திற்குரிய பலங்கொட கஸ்ஸப தேரர் உட்பட நான்கு பிக்குகள். மேலும் 5 சந்தேகநபர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்டறிந்த நீதவான், சந்தேகநபர்கள் 9 பேரையும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 9ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ)

## கிவுல் ஓயாவுக்கு எதிரான...

தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களுடைய சரித்திரத்தில் மிக முக்கியமான ஒரு திருப்பு முனையான போராட்டமாக இது அமைகிறது. ஏனென்றால் பல தசாப்தங்களுக்கு முன்னராகவே தயாரிக்கப்பட்ட இந்த இனப்பரம்பலை மாற்றுகின்ற இந்தத் திட்டம், இப்பொழுது நடைமுறைக்குக் கொண்டு வரப்படுகிறது. அமைச்சரவை அங்கீகாரம் கடந்த திங்கட்கிழமை கொடுக்கப்பட்டிருக்கிறது.

பல தசாப்தங்களுக்கு முன்னர், நீண்ட காலமாக வடக்கிலும் கிழக்கிலும் இனப்பரம்பலை மாற்றும் திட்டம், அது ஒவ்வொரு திட்டங்களின் மூலமாக அமுல்படுத்தப்பட்டிருப்பது எங்களுக்குத் தெரியும் கல்லோயா திட்டத்திலே இருந்து விசேடமாக கிழக்கின் இனப்பரம்பல் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அப்படியாகவே நகர்ந்து வந்து முல்லைத்தீவு மாவட்டம், வவுனியா வடக்கு போன்ற பிரதேசங்களிலும் இனப்பரம்பலை மாற்றுகிற திட்டம் அமுலில் இருக்கிறது.

எங்களுக்கு ஏற்கனவே தெரியும் மணலாறு வெலிஓயாவாக மாறிவிட்டது. இப்படியாகப் பல பல இடங்கள் முழுக்க மாற்றப்பட்டிருக்கன்றன. இந்த கிவுல் ஓயா திட்டம் என்பது இந்த பாரியதொரு வேலைத்திட்டத்தினுடைய ஒரு பகுதி. இது கைவிடப்பட்ட திட்டமாக இருந்தாலும்கூட, இப்பொழுது மீண்டும் அதற்கு உயிர்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அமைச்சரவை அங்கீகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. போதிய அளவு பணத்தை இதற்காக அவர்கள் செலவு செய்ய இருக்கிறார்கள்.

தமிழ் பிரதேசம் முழுவதையும் நீருக்குள்ளே அமிழ்த்தி, அதில் இருந்து வருகின்ற நீர்ப்பாசனத்தின் மூலமாக ஏற்கனவே குடியேற்றம் செய்யப்பட்ட சிங்கள பிரதேசங்களுக்கு தண்ணீரைக் கொடுப்பதற்கான திட்டம்.

இந்த அரசாங்கம் மிகத் தெளிவாக ஒரு வாக்குறுதியை கொடுத்திருந்தது. அதாவது இனப்பரம்பலை மாற்றுகிற எந்த அபிவிருத்தித் திட்டத்தையும் நாங்கள் அமுல்படுத்த மாட்டோம் என்பதை எழுத்தில் தெளிவாகச் சொல்லியிருக்கின்ற இந்த அரசாங்கம் தான், இப்பொழுது அதற்கு உத்தியோகபூர்வ அனுமதியைக் கொடுத்து அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த இருக்கிறார்கள்.

ஆனபடியினால் தான் இது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வு. ஒன்றாகச் சேர்ந்து தமிழ் மக்கள் அனைவரும், எந்தவித கட்சி பேதமும் இல்லாமல், கட்சிகளைச் சேராதவர்களும், அரசியலில் இல்லாதவர்களும் அனைவருமாகச் சேர்ந்து வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் எங்களுடைய பூர்வீகத்தைப் பாதுகாக்கிற இந்த நிகழ்ச்சியில் இன்றைக்கு ஒன்று சேர்ந்திருக்கிறோம்-என்றார். (அ)

# ஏ.ரி.எம். இயந்திரங்களில் அவதானம் உதவி செய்வது போல் நடித்து மோசடி

கொழும்பு, பெப். 03

வங்கிகளுக்கு அருகில் நின்றுகொண்டு, ஏ.ரி.எம். இயந்திரங்களில் பணம் எடுக்க வரும் முதியவர்களுக்கு உதவுவது போல் நடித்து, அவர்களின் வங்கி அட்டைகளைத் திருடி வந்த நபர் ஒருவரை தெற்கு களுத்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 11 வங்கி அட்டைகள் மீட்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட் டவர் பொலனறுவை பகுதியைச் சேர்ந்த 42 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கடந்த 30ஆம் திகதி தெற்கு களுத்துறை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் கடமை நிமித்தம் அரச வங்கி ஒன்றுக்குச் சென்றிருந்தபோது இந்த மோசடி வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

உடனடியாகச் செயற்பட்ட பொலிஸ் அதிகாரிகள், வங்கிக்கு அருகிலேயே நடமாடிக் கொண்டிருந்த சந்தேக நபரை சுற்றிவளைத்துக் கைது செய்தனர்.

அவரிடமிருந்து அவருக்குச் சொந்தமில்லாத 11 வங்கி அட்டைகளும், வேறொரு நபரின் சாரதி அனுமதிப்பத்திரமும் மீட்கப்பட்டுள்ளன.

விசாரணையில், இந்த நபருக்கு எதிராக போதைப்பொருள் கடத்தல் மற்றும் ஏனைய குற்றங்கள் தொடர்பாக பொலனறுவை மற்றும் வெள்ளவத்தை உள்ளிட்ட பல நீதிமன்றங்களில் ஏற்கனவே பல வழக்குகள் நிலுவையில் உள்ளமை தெரியவந்துள்ளது.

சந்தேக நபரை களுத்துறை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். இது போன்ற மோசடிகளிலிருந்து தப்பிக்க, ஏ.ரி. எம். இயந்திரங்களைப் பயன்படுத்தும் போது முன்பின் தெரியாதவர்களின் உதவியைப் பெறுவதைத் தவிர்க்குமாறு பொலிஸார் பொதுமக்களைக் கேட்டுள்ளனர்.

## 49 கைதிகளுக்கு...

வழங்கப்படுவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், 75000 ரூபாவுக்கும் குறைந்த அபராதத் தொகையை செலுத்தத் தவறியமைக்காக சிறைத் தண்டனை அனுபவித்து வரும் கைதிகளின் எஞ்சிய தண்டனை காலமும் ரத்து செய்யப்படவுள்ளது. (அ)

## வைத்தியர்களின்...

கொள்ளப் போவதில்லை என அந்தச் சங்கத்தின் ஊடக பேச்சாளர் வைத்திய நிபுணர் அசோக குணரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பு தேசிய வைத்தியசாலை உட்பட நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளில் சுகாதார சேவைகள் பாதிக்கப்பட்டிருந்தன. இதனால், வெளிநோயாளர் பிரிவு மற்றும் மாதாந்த சிகிச்சைக்காக வருகை தந்திருந்த நோயாளர்கள் கடும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்ததுடன், தமது விசனத்தையும் வெளியிட்டிருந்தனர். வைத்தியர்களின் இந்த நடவடிக்கையினால் ஏழை மக்களே இறுதியில் பாதிக்கப்படுகின்றனர் எனவும், இலவச சுகாதாரத் துறையை நம்பியுள்ள பொதுமக்களை இவ்வாறான நெருக்கடிக்குள் தள்ள வேண்டாம் எனவும் அவர்கள் வேதனையுடன் தெரிவித்தனர்.

சுகாதாரக் கட்டமைப்பில் நிலவும் மருந்துத் தட்டுப்பாடு, உபகரணப் பற்றாக்குறை மற்றும் வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறுதல் போன்ற பிரச்னைகளுக்குத் தீர்வு காணக் கோரி அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சருக்கு 48 மணித்தியால காலக்கெடு விடுத்திருந்தது. அந்தத் தவணை முடிவடைந்த நிலையில், கடந்த மாதம் 30ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயற்குழு கூட்டத்தின்போது,நேற்று திங்கட்கிழமை முதல் தொழிற்சங்க நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தில் சுமார் 23 ஆயிரம் வைத்தியர்கள் அங்கம் வகிக்கின்றனர். இவ்வருடத்திற்கான வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டபோது வைத்தியர்களின் முன்மொழிவுகள் புறக்கணிக்கப்பட்டமை மற்றும் "இலங்கை வைத்திய சேவை" என்ற புதிய கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பான கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படாமை போன்ற காரணங்களால் பல வைத்தியசாலைகள் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகச் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

அதற்கமைய, கடந்த 26ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்ட ஐந்து முக்கிய அம்சங்களை உள்ளடக்கிய தொழிற்சங்க நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளன. இதன் ஒரு கட்டமாக, மருந்துகள் மற்றும் ஆய்வகப் பரிசோதனைகளை வெளியிலிருந்து பெறுவதற்கான பரிந்துரைத் துண்டுகளை வைத்தியர்கள் வழங்கமாட்டார்கள். அத்துடன் அரசியல் தேவைகளுக்காக முன்னெடுக்கப்படும் நடமாடும் மருத்துவ முகாம்களில் பங்கேற்கப் போவதில்லை எனவும், முறையான பாதுகாப்பு உதவியாளர்கள் இன்றி நோயாளிகளைப் பரிசோதிப்பதிலிருந்து விலகியிருக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், தொழிற்சங்க நடவடிக்கையைத் தீவிரப்படுத்தும் நோக்குடன், தமக்கு நியமிக்கப்பட்ட வைத்தியசாலைகளைத் தவிர்ந்து, ஏனைய வைத்தியசாலைகளுக்குச் சென்று வழங்கும் சேவைகளிலிருந்தும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் விசேட வைத்திய நிபுணர்கள் விலகியுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்றொழிலாளர்மீது தாக்குதல் கடற்றொழில் அமைச்சர்கண்டனம்

கொழும்பு, பெப். 03

பொய்க் குற்றச்சாட்டுகளை முன்வைத்து இலங்கை மீனவர்கள் குழுவொன்றின் மீது இந்தியக் கடலோரக் காவல்படை அதிகாரிகள் நடத்திய தாக்குதலுக்குத் தனது கடும் கண்டனத்தைத் தெரிவிப்பதாகக் கடற்றொழில் அமைச்சர் இ. சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறிய அமைச்சர், இச்சம்பவம் குறித்து இந்திய தூதரகத்துக்கும் அறிவிக்கப்பட்டதாகக் கூறினார்.

வென்னப்புவ துறைமுகத்திலிருந்து கடற்றொழிலுக்காக சென்ற இரண்டு படகுகளில் இருந்த 12 மீனவர்கள் மீது, கடந்த 29ஆம் திகதி இலங்கை கடற்பரப்பில் வைத்து இந்தியக் கடலோரக் காவல்படை அதிகாரிகள் தாக்குதல் நடத்தியமை தெரிந்ததே. (அ)

## யாழ். பாதுகாப்பு...

உருவாக்குகிறார்கள் எனவும் இது நாட்டுக்கு ஆரோக்கியமற்ற சூழ்நிலை என்றும் பாதுகாப்புச் செயலாளர் குறிபப்பிட்டுள்ளார்.

அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கு சேவை செய்வதற்காக மேற்கொள்ளப்படும் இத்தகைய பிரசாரங்களை வன்மையாகக் கண்டிப்பதாக என்று அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (அ)

## கிவுல் ஓயா திட்டத்துக்கு...

இந்த ஆர்ப்பாட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான சி. சிறீதரன், இரா.சாணக்கியன், து. ரவிக ரன், ப. சத்தியலிங்கம், செல்வம் அடைக்கலநா தன், முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், மு. சந்திரகுமார், சாந்தி சிறிஸ்கந்த ராஜா, தமிழ் அரசுக் கட் சியின் பதில் தலைவர் சீ. வீ. கே.சிவஞானம், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் பேச்சாளர் துளசி, பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் பங்கேற்றிருந்தனர். (அ)

## திடீர் வயிற்றோட்டத்தி...

மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் சிறுவன் சேர்க்கப்பட்டான். இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன் தினம் இரவு அவர் உயிரிழந்தார்.

வயிற்றோட்டம் ஏற்பட்டு, உடலில் நீர்ச்சத்து குறைந்து கிருமித்தொற்றினால் மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-05)

## கொலைக் குற்றவாளி...

அடுத்து குறித்த எதிரி, அதே இடத்தைச் சேர்ந்த 19 வயதான அர்ச்சுனன் றஜீபனை வயிற்றில் குத்தி படுகாயமேற்படுத்தி கொலை செய்த குற்றத்துக்காக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

வழக்கு, கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதி ஜி. அலெக்ஸ்ராஜா முன்னிலையில் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டவேளை மரண தண்டனை விதிக்கப்பட்டது.

எதிர்தரப்பு சட்டத்தரணி என்.சிறீகாந்தா முன்னிலையில் தீர்ப்பு வாசித்துக் காட்டப்பட்டதுடன், குறித்த எதிரியிடம், மன்றுக்கு ஏதாவது கூற விரும்புகின்றீர்களா என்று கேள்வி கேட்கப்பட்டு அவருக்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இதனையடுத்து, நீதிமன்றத்தின் அனைத்து மின் விளக்குகளும் அணைக்கப்பட்டு அனைவரும் எழுந்து நிற்க குறித்த தீர்ப்பு வழங்கப்பட்டது. (அ)

ஈழநாடு
Eelanadu

## வாகனங்கள் இறக்குமதிச் செலவு 2 பில்லியன் டொலரைக் கடந்தது

கொழும்பு, பெப். 03

2025ஆம் ஆண்டில் இலங்கையின் வாகன இறக்குமதிச் செலவு 2 பில்லியன் டொலரைக் கடந்துள்ளது.

டிசெம்பர் மாத தரவுகளுக்கு அமைய, இலங்கை மத்திய வங்கி இந்த விடயத்தை அறிவித்துள்ளது.

2025ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் மாத்திரம் தனிப்பட்ட மற்றும் வணிக தேவைகளுக்காக 301 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான வாகனங்கள் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இதற்கமைய, 2025ஆம் ஆண்டில் மொத்த வாகன இறக்குமதி செலவு 2.047 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.

2025 ஆம் ஆண்டுக்கான மொத்த வாகன இறக்குமதியில், தனிப்பட்ட பாவனைக்கான வாகன இறக்குமதிக்காக மாத்திரம் 1.6 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

## ராஜபக்ஷவுக்கும் அநுரவுக்கும் இடையில் வித்தியாசம் இல்லை!

### சஜித் அணி குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 03

தூய்மையான அரசியல் ஒன்றை ஏற்படுத்துவதாக ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தில் இருப்பவர்கள், தற்போது நாள்குநாள் ஊழல் மோசடிகளில் சம்பந்தப்பட்டு வருகிறார்கள். ராஜபக்ஷ குழுவுக்கும் அநுர குமாரவின் குழுவுக்குமிடையில் வித்தியாசம் இல்லை என ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் நிரோசன் பாதுக்க தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சி காரியாலயத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டை ஆட்சி செய்துவந்த அனைவரும் ஊழல் மோசடிகாரர்கள் எனவும் தூய்மையான அரசியல் ஒன்றை கட்டியெழுப்ப அதிகாரத்தை வழங்குமாறு தெரிவித்தே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒருவருட காலத்தில் மக்கள் உணரும் வகையில் எதனையும் செய்யவில்லை. அதேநேரம் அரசாங்கத்தில் இருப்பவர்கள் நாளுக்கு நாள், ஊழல் மோசடி சம்பவங்களுடன் சம்பந்தப்பட்டு வருகிறார்கள்.

அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, கறுப்புப் பட்டியலில் உள்ள நிறுவனம் ஒன்றின் உரிமையாளர் ஒருவரின் வங்கிக் கடன் அட்டையை பயன்படுத்தி இந்தியாவில் வைத்து ஒரு மில்லியன் ரூபாவுக்கு பொருட்கள் கொள்வனவு செய்துள்ளதாக குற்றச்சாட்டு தெரிவிக்கப்படுகிறது. ஊழல் மோசடி தொடர்பில் இவர்களுக்கும் ராஜபக்ஷ குழுக்களுக்கும் இடையில் வித்தியாசம் இருக்கிறதா?

சுங்கத்தில் இருந்து கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டது முதல் தற்போது தரம்குறைந்த நிலக்கரி இறக்குமதி வரை பாரியளவில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றிருக்கின்றன. ஆனால் அரசாங்கம் அனைத்து விடயங்களையும் அரச அதிகாரிகள் மீது குற்றம் சுமத்தி, தப்பித்துக் கொள்ளும் நடவடிக்கையையே கையாண்டு வருகிறது- என்றார். (அ)

## பொலிஸ் அதிகாரிகளை தாக்கிய கும்பல் சிக்கியது!

கொழும்பு, பெப். 03

கல்வலயாய பிரதேசத்தில் பொலிஸ் அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தியதாக கூறப்படும் கும்பல் ஒன்று மகாஓயா பொலிஸாரால் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளது.

இந்த தாக்குதல் சம்பவம் சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

போதைப்பொருள் சோதனை நடவடிக்கையின்போதே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மகாஓயா பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரிகள் குழு ஒன்றின் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் படுகாயமடைந்துள்ள நிலையில் மகாஓயா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் பொல்லெபெத்த பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். (அ)

## ரணில் மீதான விசாரணை சட்டப்படிதான் நடக்கிறது!

### அமைச்சர் ஆனந்த விஜேபால



கொழும்பு, பெப். 03

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள நிதி மோசடி வழக்கில், குற்றப்புலனாய்வுத் திணைக்களம் சட்ட நடைமுறைகளைப் பின்பற்றவில்லை என்ற குற்றச்சாட்டுகளைப் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நிராகரித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்தபோது லண்டனிலுள்ள வொல்வர்ஹாம்டன் பல்கலைக்கழகத்துக்கு மேற்கொண்ட பயணம் தொடர்பானதே இந்த சர்ச்சையாகும்.

அவரது மனைவி பேராசிரியர் மைத்திரி விக்ரமசிங்க கௌரவ பட்டம் பெறும் நிகழ்வில் கலந்து கொள்ளச் சென்ற இந்தப் பயணம், ஒரு தனியார் பயணமாக இருந்த போதிலும், சுமார் ரூ. 16.6 மில்லியன் முதல் ரூ. 16.9 மில்லியன் வரையிலான அரச நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக 2025 ஒகஸ்ட் மாதம் கைது செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்க, பின்னர் மருத்துவக் காரணங்களுக்காகப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ரணில் விக்கிரமசிங்க சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி திலக் மாரப்பன மற்றும் அனுஜ பிரேமரத்ன ஆகியோர் சி.ஐ.டியின் செயல்பாடுகளைக் கடுமையாகச் சாடினர்.

பல்கலைக்கழகத்தின் அழைப்பிதழ் உண்மையானதா என்பதை அறிய சி.ஐ.டி. மேற்கொண்ட லண்டன் பயணம் தோல்வியடைந்ததாக அவர்கள் கூறினர்.

வெளிநாட்டு விசாரணைகளுக்கு அவசியமான "பரஸ்பர சட்ட உதவிச் சட்டத்தை" சி.ஐ.டி பயன்படுத்தவில்லை எனக் குற்றம் சாட்டினர்.

இது ஒரு உத்தியோகபூர்வ பயணத்தின் நீடிப்பு என்றும், ஜனாதிபதியுடன் பாதுகாப்புப் பிரிவினர் செல்வது இயல்பான ஒன்று என்றும் அவர்கள் வாதிட்டனர்.

எனினும் இவ்விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் ஆனந்த விஜேபால, சி.ஐ.டி சுதந்திரமாகச் செயல்படும் அதிகாரம் கொண்டது எனத் தெரிவித்தார்.

சட்ட நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என எதிர்க்க தரப்பு சட்டத்தரணிகள் கருதினால், அதனை அவர்கள் நீதிமன்றத்தில் நிரூபிக்கட்டும். இந்த விவகாரத்தில் இறுதி முடிவை நீதிமன்றமே எடுக்கும். ஒவ்வொரு சிறிய விசாரணைக்கும் சட்டமா அதிபரிடம் அனுமதி பெறவேண்டிய அவசியம் சி.ஐ.டிக்கு இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த வழக்கின் விசாரணை 90 வீதம் நிறைவடைந்துள்ளதாக மேலதிக செலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அடுத்த விசாரணையின்போது, சர்ச்சைக்குரிய அழைப்பிதழின் உண்மைத்தன்மை குறித்த இறுதி அறிக்கையை சி.ஐ.டி சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## தரமற்ற எரிபொருள் சேமிப்பினால் ரூ. 30 கோடிக்கும் மேல் நிதி இழப்பு!

கொழும்பு, பெப். 03

எரிபொருளை உரிய தரநிலைகளின்றி சேமித்ததன் காரணமாக 30 கோடி ரூபாவுக்கும் அதிகமான பெரும் நிதி இழப்பு ஏற்பட்டுள்ளதாக ஒருங்கிணைந்த தொழிற்சங்க கூட்டணியின் ஒருங்கிணைப்பாளர் ஆனந்த பாலித குற்றம் சுமத்தியுள்ளார்.

அதிகாரிகளின் தூரநோக்கற்ற முடிவுகள் மற்றும் ஊழல் செயல்பாடுகளின் காரணமாக இந்த நிதி இழப்பை பொதுமக்கள் தான் சுமக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

92 ஒக்ரேன் பெற்றோல் மற்றும் சாதாரண டீசல் விலையை வெறும் 2 ரூபாவினால் மட்டுமே அரசாங்கம் குறைத்துள்ளது எனவும் இது பொதுமக்களை ஏமாற்றும் செயல் எனவும் அவர் குற்றம் சுமத்தினார்.

சுமார் 29,963 மெற்றிக் தொன் பெற்றோல் 8 முதல் 15 மாதங்கள் வரையிலான காலப்பகுதியில் பொருத்தமற்ற வகையில் சட்ட விதிகளுக்கு புறம்பாக சேமித்து வைக்கப்பட்டது. இதனால் 600 மெற்றிக் தொன்களுக்கு மேற்பட்ட பெற்றோல் ஆவியாகி வீணாகியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆவியாகிய எரிபொருளின் மதிப்பு சுமார் 30 கோடி ரூபா எனவும் இந்த நிதி அழிவுக்கு, ஜனாதிபதி நியமித்த தலைவர் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சரே நேரடியாக பொறுப்பாளர்கள் என அவர் குற்றம் சாட்டினார். (அ)

## மனுவர்ண எம்.பிக்கு பிடியாணை

கொழும்பு, பெப். 03

தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் மனுவர்ண மற்றும் மற்றொரு நபருக்கு எதிராக நேற்று பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வழக்கு தொடர்பாக நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியதற்காக கோட்டை நீதவான் நீதிமன்றத்தால் இந்தப் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## ரூ.300 கோடிக்கு மேற்பட்ட போதைப்பொருள் இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்ப உத்தரவு!

கொழும்பு, பெப். 03

திக்கோவிட்ட மீன்பிடித் துறைமுகத்திற்குக் கொண்டு வரப்பட்ட, 300 கோடிரூபாவிற்கும் அதிக பெறுமதியான போதைப்பொருள் தொகையை அரச இரசாயன பகுப்பாய்வாளருக்கு அனுப்பி அறிக்கை கோருமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

11 மீனவர்களையும், அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட 263 கிலோ கிராம் போதைப்பொருளையும், பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகம் நேற்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியது.

இதனைத் தொடர்ந்து பொலிஸார் முன்வைத்த சமர்ப்பணங்களை ஆராய்ந்த கொழும்பு பிரதான நீதவான் அசங்க எஸ். போதரகம, குறித்த போதைப்பொருளை அரச இரசாயன பகுப்பாய்வாளரிடம் அனுப்பி அறிக்கை கோருமாறு உத்தரவிட்டார்.

கடந்த 25 ஆம் திகதி சந்தேகத்திற்குரிய 11 மீனவர்கள் பயணித்த பல நாள்மீன்பிடிப் படகில் இருந்து 109.422 கிலோ கிராம் ஐஸ் போதைப்பொருளும், 112.258 கிலோ கிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டிருந்தன.

அப்போதைப்பொருள் தொகை 15 பாதுகாப்புப் பைகளில் இடப்பட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

பின்னர் நீதவான் பிறப்பித்த உத்தரவுக்கு அமைய, நீதிமன்றப் பதிவாளரின் கண்காணிப்பின் கீழ் குறித்த போதைப்பொருளுக்கு முத்திரை இடப்பட்டு, அரச இரசாயன பகுப்பாய்வாளருக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. (அ)

## நிதி நெருக்கடியால் அமெ.தூதரகத்தின் சமூக ஊடக புதுப்பிப்புகள் கட்டுப்பாடு

கொழும்பு, பெப். 03

அமெரிக்காவில் ஏற்பட்ட நிதி ஒதுக்கீட்டு குறைபாட்டினால், அமெரிக்க மத்திய அரசு ஓரளவு மூடப்பட்டுள்ள நிலையில், இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகம் தனது பேஸ்புக் பக்கத்தில் வழக்கமான புதுப்பிப்புகளை தற்காலிகமாக கட்டுப்படுத்துவதாக அறிவித்துள்ளது.

தூதரகம் வெளியிட்ட பேஸ்புக் பதிவில், முழுமையான செயல்பாடுகள் மீண்டும் தொடங்கும் வரை அவசர மற்றும் பாதுகாப்பு தொடர்பான தகவல்கள் மட்டுமே பகிரப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த காலப்பகுதியில் வழக்கமான தகவல் புதுப்பிப்புகள் நிறுத்தி வைக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதனிடையே, நிதி பற்றாக்குறை இருந்தாலும், அமெரிக்காவிலும் இலங்கை உள்ளிட்ட வெளிநாடுகளிலும் உள்ள அமெரிக்க தூதரகங்களில் திட்டமிடப்பட்ட கடவுச்சீட்டு மற்றும் விசா சேவைகள் அனுமதிக்கும் போது தொடரும் என தூதரகம் தெரிவித்துள்ளது.

தூதரக சேவைகள் மற்றும் அதன் செயல்பாட்டு நிலை குறித்து புதிய தகவல்களை அறிந்து கொள்ள travel.state.gov இணையதளத்தை பார்வையிடுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால்02.01.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org